# வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கிறாள்?

(கவிதைகள்)



அன்பன் செல்வக்குமார்


மணிமேகலைப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447,
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
இணைய தளம் : www.manimekalaiprasuram.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ✻ | வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கிறாள்? |
| ஆசிரியர் | ✻ | அன்ரன் செல்வக்குமார் |
| மொழி | ✻ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ✻ | 2005 |
| பதிப்பு விவரம் | ✻ | முதல் பதிப்பு |
| உரிமை | ✻ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ✻ | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ✻ | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ✻ | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ✻ | xxiv + 72 = 96 |
| அட்டைப்பட ஓவியம் | ✻ | ஐஸ் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | ✻ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ✻ | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ✻ | தையல் |
| வெளியிட்டோர் | ✻ | மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 17. |

விலை ✻ ரூ. 30.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அகால மரணமான
எங்கள்
அன்பு நண்பன்
ம. பாலேந்திரன்
(பாலுக்குட்டி)
அவர்கட்கு
இளவாலை நண்பர்கள்
சார்பாக
இக்கவிதைத் தொகுப்பு
சமர்ப்பணம்.

– *அன்ரன் செல்வக்குமார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மனதில் எழும் எண்ணங்களைப் பேச்சின் மூலம் வெளிக்கொணரவே பலர் திக்குமுக்காடிப் போவர். சொல்ல வருவதையும் கோர்வையாகச் சொல்லப் பலருக்கு வருவதில்லை. முன்னுக்குப் பின் முரணாகப் பேசுபவரும் உண்டு. இவையெல்லாம் மன ஈடுபாடு குறைவாக உள்ளதனால் ஏற்படும் குறைபாடுகளே.

பேசுவதற்கே திணறும் சிலர், தம் எண்ணங்களை எழுத்தில் வடித்துக் காட்ட இன்னும் என்ன பாடுபடுவரோ, தெரியவில்லை. கடிதம் எழுதவதற்கே கற்றுவரவேண்டிய நிலையில் உள்ளவர்களிடம் கதை, கட்டுரைகள் என்று எதிர்பார்க்க முடியுமா? அப்படியே கதை, கட்டுரைகள் எழுதும் வல்லமை படைத்திருந்தாலும், தம் எண்ணங்களைக் கவிதைகளாக வடித்துக் காட்ட எத்தனை எழுத்தாளர்கள் முன்வருவர்? விரல் விட்டு எண்ண வேண்டிய நிலைதான் மிஞ்சும்!

கவிதை படைப்பதை வரப்பிரசாதமாகக் கொண்டிருப்போர் பலர் தமிழகத்தில் இருந்திருக்கின்றனர்; இன்னமும் இருந்து வருகின்றனர். கவிதை உருவாக்குவதற்கு யாப்பிலக்கணம் கற்றிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்ப்ட்டது அந்நாளில். தற்போது மரபுக் கவிதைகளோடு புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் வெளிவரத் துவங்கியுள்ளன. எல்லாவற்றிற்குமே கற்பனை வளம், கலாரசனை, எண்ண ஓட்டங்கள், நயம், நகைச்சுவை உணர்வு என்றெல்லாம் இருந்தால் மட்டுமே கவிதை உலகில் காலடி பதிக்க முடியும். இந்தத் திறமை ஒருவருக்கு மற்றவர் கூடக் குறைய இருக்கலாம். திறமையின் அடிப்படையில், எழுத்து வன்மையும் கூடியிருந்தால் கவிதைகள் உருவாகிக் கொண்டே இருப்பதற்குக் கேட்பானேன்?

இந்தத் துறையில் சிறந்து விளங்குவோர் பலருள் யாழ்ப்பாணம் இளவாலையைச் சார்ந்த இளம் எழுத்தாளர்/ கவிஞர் திரு. அன்ரன் செல்வக்குமாரும் ஒருவர். நாற்பத்தி எட்டு வரிகளிலும் கவிதை உருவாக்கலாம்; நான்கே வரிகளிலும் கவிதை படைக்கலாம் என்பதைத் திரு. அன்ரன் செல்வக்குமார் அவர்கள் நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

'வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கிறாள்?' என்ற இந்நூலைப் புரட்டிப் படித்துப் பாருங்கள்! நீங்களும் கண்ணீர் வடிப்பீர்கள்... ஆனந்தக் கண்ணீர்!

- பதிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரைப் பற்றி....



செல்வக்குமார் என்னும் பெயரில் இலக்கிய உலகிலும் T. அன்ரன் என்னும் பெயரில் பரவலாகவும் அறிமுகமாகியுள்ள அன்ரன் செல்வக்குமார் 'செவ்வந்தி' காலாண்டு சஞ்சிகையில் வெளியாகிய (25-06-1975) 'புதிய பாடம்' என்ற சிறுகதையின் மூலம் தனது பதினைந்தாவது வயதில் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்தவர்.

இதுவரையில் முன்னூறுக்கு மேற்பட்ட கவிதைகளையும், 48-க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், எட்டு ஆங்கில சிறுகதைகளையும், பல கட்டுரைகளையும் படைத்துள்ள இவர் இன்றைய இளைய தலைமுறையின் துடிப்பு மிக்க கவிஞரும் எழுத்தாளரும் - நாடக நடிகருமாவார்.

இலங்கை சீமேந்துக் கூட்டுத்தாபனத்தில் (புத்தளம்) Shift Burner Chemist உத்தியோகஸ்தராகக் கடமையாற்றும் இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த உதைபந்தாட்ட ஹொக்கி வீரரான இவர் அகில இலங்கைப் பாடசாலை உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியிலும், (பாங்ஹொக்) இலங்கை இளைஞர் உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியிலும் (பிலிப்பைன்ஸ்), இலங்கை இளைஞர் ஹொக்கி தெரிவுக்கோஷ்டியிலும் (மலேஷியா) அங்கம் வகித்த முன்னணி வீரர் என்பதும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவன் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

25.06.1990 **இளவாலை இளங்கதிர் மன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு உதவி ஆசிரியர்

## புலவர் ம. பார்வதி நாதசிவம்

அவர்களின் பார்வையில்

T. அன்ரன் எனவும்
செல்வக்குமார் எனவும்
எல்லோராலும் செல்லமாக
அழைக்கப்படும் - எனது
ஊரவரான - கவிஞர்
அன்ரன் செல்வக்குமார்
என்னும் இனியவனை
அரைக்காற்சட்டையுடன்
துள்ளித்திரியும் சிறுவனாக
துடிப்புமிக்க இளைஞனாக
சிறந்த உதைபந்தாட்ட வீரனாக
சிறந்த ஹொக்கிவீரனாகப்
பார்த்தவர்களுக்கு மத்தியில்
சிறந்த கவிஞன் - எழுத்தாளனாக
இவர்
பரிணமித்து வளர்ந்து வந்ததை
உன்னிப்புடன் அவதானித்து
அவ்வப்போது இவரின் ஆக்கங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு வாரமலர் - 'இலக்கியப் பக்கம்'
ஞாயிறு பத்திரிகையில் பிரசுரித்து
இவருக்கு
நல்ல ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து
வளர்த்து வந்தவன் நான்
இவர் புனித ஹென்றியரசர் கல்லூரியில்
பத்தாம் வகுப்பில் படிக்கும்போதே - அ+து
பதினைந்து வயதில் இலக்கிய உலகில்
காலடி பதிக்கும்போதே
'செவ்வந்தி'யில் வெளியாகிய
தனது 'புதியபாடம்' சிறுகதையுடன்
அதிகாலையில் என்வீடு தேடிவந்து அதன்
போட்டாப் பிரதியொன்றை
என்கையில் கொடுத்து - 'சேர்
எனது முதல் சிறுகதை - 'புதிய பாடம்'
மூன்றாம் பரிசு பெற்றுள்ளது.'
எனச் சொன்னபோது - இவரின்
வெள்ளை உள்ளம் எனக்குத் தெரிந்தது
மகிழ்ச்சியடைந்தேன் நான்
ஏனெனில்;
இளவாலையின் பெயரை
இலக்கிய உலகிற்கு
எதிர்காலத்தில் பதிவேட்டில்
பதியவைக்க - ஓர்
திறமையுள்ள நேர்மையுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுணர்வுள்ள - ஓர்
இளம் கவிஞர் + எழுத்தாளர்
எங்களுக்கு கிடைத்துவிட்டார் என
நான் எண்ணியது மாத்திரமல்ல
இவரின் தமிழ் ஆசிரியர்
வித்துவான் அ. சந்தியாப் பிள்ளை
நாடக ஆசிரியர் நண்பர்
திரு. பி.ஏ.சி. ஆனந்தராஜா
பெருங்கவிஞர் 'இளவாலை அமுது'
ஆகிய நால்வரும்
ஒன்றாக ஒரு இலக்கியவிழாவில்
கலந்துவிட்டுத் திரும்பிவரும்போது
அன்ரன் செல்வக்குமார் பற்றி
பேசிக் கொண்டோம்...
எங்கள் எண்ணம் வீண் போகவில்லை
1984ல்
இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில்
தொழில்நுட்பக் கல்லூரி
மாணவ மன்றத்தினரின் வெளியீடாக
இவரின்
'கோடுகளும் கோலங்களும்'
புதுக்கவிதைத் தொகுதி வெளிவந்தபோது
அன்ரன் செல்வக்குமாருக்கு - அப்போது
இருபத்திநாலு வயது
இப்போது ஆறுவருடம் கழித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் முப்பதாவது வயதிலே
'வானத்துப்பெண் ஏன் கண்ணீர் வடிக்கின்றாள்?'
எனக் கேட்டபடியே
ஒரு புதுக் கவிதைத் தொகுதி.
கேள்விக்குரிய விடைகளும் ஊகங்களாக
அதற்குள்ளே அடக்கப்பட்டும் உள்ளன
இவரது கவிதைகள்
சமுதாயத்தின் இடிபாடுகளைக் கண்டு
உள்ளம் தேய்ந்தவை
இவரது கவிதைகள் பூவில்நெய்த சேலைகள்
கவிதைகள் இனிய பூஞ்சோலைகள்
பல வாசமான முல்லைகள்
இவருடைய எழுத்துக்கள்
ஆடையணியாத பூக்கள்
அன்ரன் செல்வக்குமாரின் எழுத்து
அர்ச்சுனனின் அம்புபோல்
இலக்குத் தவறுவதில்லை
அறுபது கவிதைகளில் இரண்டு
1982ம் 1983ம் ஆண்டுகளில்
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில்
இடம்பெற்ற கவிதைப் போட்டிகளில்
முதல் பரிசு பெற்ற
மரபுக் கவிதைகள்
சந்தம் - எதுகை மோனை
யாப்பு - விதி என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறப்படாமல் - சிதறாமல்
ஒரு
கைதேர்ந்த கவிஞராக
ஒளிவீசத் தொடங்கிவிட்டார் என்பதை
துலாம்பரமாகக் காட்டும்
இவரின் எழுத்து நடை
படிப்போரை வசீகரிக்கும்
தனித்தன்மை
இவரின் ஆழமான கவிதை மனது
இவரது இலக்கியத் தேடல்
இவரது கலையுணர்ச்சி - அழகியல்
என்பன
கவிதைத் தொகுதி முழுவதிலும்
ஒரு புதுத்துடிப்புடன்
ஒரு உத்வேகத்துடன்
புதிய இரத்தமாகப் பாய்கிறது.

இவரின்
வேகமான ஓட்டம்
இரண்டு கால்களினாலும்
பந்தைக் கையாளும் திறமை
இவரின் துடிப்பான
ஹொக்கி விளையாட்டு
என இவரைப் பற்றி
அவ்வப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து வைத்துள்ளேன்

அதுபோல;

இவர் எழுதும் கவிதைகளிலும்

ஒருவேகம் + விறுவிறுப்பு + துடிதுடிப்பு

இவரின் கவிதைகளில் காணமுடிகின்றது

கலைமகள்

இவ்விளம் கவிஞர்

அன்ரன் செல்வக்குமார் அவர்களுக்கு

எல்லாவிதமான

அருள்களையும் கொடுத்தருள வேண்டி

இவருக்காகப் பிரார்த்தித்து

என் பார்வையை

நிறைவு செய்கின்றேன்!

சுபம்!

மயிலங்(கூடல்)
இளவாலை
25.06.1990

அன்புடன்

**புலவர் ம. பார்வதி நாதசிவம்**

உதவி ஆசிரியர்
ஆசிரிய பீடம்
ஈழநாடு காரியாலயம்
மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இனிய இலக்கிய அன்பர்களுக்கு என் இனிய அன்பு வணக்கங்கள் பல...

நின்று... நிதானித்து... நிமிர்ந்து பார்க்கின்றேன்... எழுத்துலகில் காலடி எடுத்துவைத்து பதினைந்து வருடங்கள் பூர்த்தியடைந்து விட்டன. "எழுத்தாளன் சுதந்தரமானவன். அவன் எண்ணங்கள் சுதந்தரமானவை. அவனை ஒரு வட்டத்துக்குள் அடக்கிவிட முடியாது" என்ற கொள்கையின் அடிப்படையில் எழுதுகோலைத் தூக்கிய எனது கரங்கள் அதன் நிலையில் நின்று சிறிதும் தளர்ந்துவிடவில்லை.

நான் யாழ் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் பொறியியல் துறை மாணவனாக இருந்தபோது எனது "கோடுகளும் கோலங்களும்" புதுக் கவிதைத் தொகுப்பை வெளியீட்டி வைத்த தொழில் நுட்பக் கல்லூரி மாணவ மன்றத்தினர் என்றும் என் நன்றிக்கும் நினைவுக்கும் உரியவர்கள்.

"கோடுகளும் கோலங்களும்" புதுக்கவிதைத் தொகுப்பிற்கு வாசகர்களாகிய நீங்கள் கொடுத்த அன்பும், ஆதரவும் அங்கீகாரமும்தான் நான் தொடர்ந்து இலக்கிய உலகில் நடை ப்யின்றுவர ஊன்றுகோலாய் அமைந்தது என்றால் அது மிகையாகாது.

எப்போதும் எனது எழுத்துக்கள் சமூகத்தில் நடப்பனவற்றை நடைமுறையை வாசகர்களாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குச் சொல்லிக் கொண்டேயிருக்கும். இந்தப் பதினைந்து வருடகால எனது இலக்கிய வாழ்வில் நானும் எனது எழுத்துக்களும் பெரிதாக மாறிவிட்டோம் என்று தான் சொல்ல வேண்டும்.

ஆரம்பத்தில் சமூகத்தில் புரையோடிப் போயுள்ள போலிகள், பொய்மைகள், பம்மாத்துக்கள் இறுமாப்புகளாய், காதல் ஏமாற்றம் ரணம் இவை பற்றிச் சொல்லிய எனது கவிதைகள் பின்னர் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அதன் முன்னெடுப்புக்களைச் சொல்ல விழைந்தது. எமது தாயகத்தில் நாம் சுயமரியாதையுடனும் உரிமையுடனும் சுதந்தரமாகவும் வாழ எம்மை நாமே ஆழவேண்டும் என்ற சுதந்தர அவாவில் நானும் எனது எழுத்தும் முற்றாக மாறிப் போய்விட்டோம்.

எமது விடுதலைப் போராட்டத்தில் நானும் எனது கவிதைகளும் முக்கிய பங்கு வகிக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டோம். அதன் காரணமாக 1980ல் இருந்து 1990 வரை பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த எனது கவிதைகள் கூடுதலாக எம் மண்ணின் மீட்புப் பற்றியும் எமது விடுதலை பற்றியுமே அதிகளவில் எழுதப்பட்டிருக்கின்றன, சொல்லியிருக்கின்றன.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் எனக்கும் உள்ள உறவு இன்றும் கூட ஒரு தாய்க்கும் பிள்ளைக்குமான உறவு. சுருக்கமாகச் சொல்லப் போனால் "தொப்புள் கொடி உறவு."

எனது கவிதைகள், சிறுகதைகள் இன்று பலராலும் விதந்துரைக்கப்படுகிறது என்றால் அதற்கு உரம் இட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்பாய்ச்சிய இருவரை நான் என் வாழ்நாளில் மறந்து விட முடியாது எனது தமிழ் ஆசிரியர், மறைந்த வித்துவான் திரு. அ. சந்தியாப்பிள்ளை அவர்களும் ஆசிரியர் திரு. பி.ஏ.சி. ஆனந்தராஜா அவர்களும் என் கண்ணின் கருமணிகள் போன்றவர்கள். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் "கவின் கலைமன்றம்" என்னை புடம் போட்டது எனக் கூறினால் அது மிகையாகாது.

எனது சிறுகதை கவிதைகளைப் படித்து என்னை அவ்வப்போது தட்டிக் கொடுத்து எழுத்து உலகில் நிலையான ஒரு இடத்தை நான் எட்டிப் பிடிப்பதற்கு களம் அமைத்துத் தந்த இலக்கியவாதியும் உடன்பிறவாத அண்ணல் சகோதரனுமாகிய திரு. S. ஜெகதீசன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

மேலும் எனது 'வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கின்றாள்?' என்ற எனது புதுக் கவிதைத் தொகுதியை வெளியீட்டிவைக்கும் இளவாலை இளங்கதிர் மன்றத்தினர்க்கும், அதன் தலைவர் திரு.வே. இ. தவக்குமார் அவர்களுக்கும் மதிப்புரை நல்கிய பிரதேசத்தின் மதிப்புக்குரிய கவிஞரும், எழுத்தாளரும், ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியருமாகிய புலவர் திரு. ம. பார்வதி நாதசிவம் அவர்களுக்கும் வாசகர்களாகிய உங்களுக்கும் என் அன்பு நன்றிகள்.

அன்புடன்

**அன்ரன் செல்வக்குமார்**

Lake View
No.1, Colombo Road
Puttalam, Srilanka
25.06.1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை இளங்கதிர் மன்றத் தலைவர் பேனாவிலிருந்து இலக்கிய அன்பர்களுக்கு!



"இளவாலை இளங்கதிர் மன்றம்" இன்று தன் 10வது ஆண்டில் காலடி பதித்து நிற்கும் இன்றைய நாளில் எங்கள் மன்றத்தின் பிரபல பத்திராதிபரும் - கவிஞரும் - எழுத்தாளருமாகிய நண்பன் அன்ரன் செல்வக்குமாரின் 'வானத்துப்பெண் ஏன் கண்ணீர் வடிக்கின்றாள்?' என்னும் புதுக்கவிதைத் தொகுதியை எங்கள் இலக்கிய வட்டம் மூலம் வெளியீட்டி வைப்பதில் எங்கள் மன்றமும் மொத்த அங்கத்தவர்களும் 'இளவாலை இலக்கிய வட்டம்' பெருமகிழ்ச்சியடைகின்றது.

நண்பர் அன்ரன் செல்வக்குமார் ஒரு சிறந்த கவிஞர், எழுத்தாளர், பட்டிமன்றப் பேச்சாளர், நாடக நடிகன், ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரன், ஹொக்கி வீரன். எங்கள் மன்றத்தின் எந்தவொரு நிகழ்ச்சியிலும் அன்ரன் செல்வக்குமாரின் பங்களிப்பு நிச்சயம் இருக்கும். இவர் ஒரு நகைச்சுவையாளர். தான் கண்ட காட்சியை, பார்த்த சம்பவத்தை அப்படியே அச்சொட்டாக அடிபிசகாமல் நகைச்சுவையாகச் சொல்லவும், நடித்துக் காட்டவும் கூடியவர். இவரிடம் நகைச்சுவையாக கதையைக் கேட்பதற்கென்று ஒரு கூட்டம் எப்போதும் இருக்கும். புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோது 'தனி' நடிப்பில் இவரை மிஞ்ச யாராலும் முடியாது. தனியொருவனாக நின்று பல பாத்திரங்களில் நடிப்பதில் மகா கெட்டிக்காரன், இவரின் "பொன்னம்மாக்கா பட்டணம் போகிறாள்", "மகன் டுபாய் போகிறான்" நாடகங்கள் மிகவும் பிரபலமானவை. "மகன் டுபாய் போகிறான்" என்ற நாடகத்தில் இவரின் பெண் பாத்திரம் இன்றும்கூட பல நண்பர்கள், நண்பிகள், இரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஒரு குறிப்பிற்காக துபாய் போன மகன் மூன்றாம் நாள் பலாலியில் விமான நிலையத்தில் வந்திறங்கிவிட வீட்டவர "மகன் டுபாய் போய் விட்டான். இனி 6 மாதத்தில் அடிவளவுக்குள் கார் நிற்கும்" என ஊரெல்லாம் புளுகித்திரிந்த கணவன், மகன் மூன்றாம் நாள் பலாலியிலிருந்து இறங்கி வீடுவந்து சேர்ந்ததைக் கண்டு இருதய வலியில் துடிதுடித்து கிணற்றடியில் விழுந்து இறந்து போகிறார்.

பொன்னம்மாக்காவாக நடித்த நண்பன் அன்ரன் செல்வக்குமார் தொடர் வசனங்களைச் சொல்லிச் சொல்லி அழுவார். கிராமத்துப் பெண்கள் தலையிலும் வயித்திலும் நெஞ்சிலும் அடித்துக்கொள்வர். கிராமத்துப் பெண்கள் அழுவதுபோல அழ வேண்டும் மூக்கைச் சிந்த வேண்டும், இவரின் அந்தக் கட்டம் நாடகத்தின் அதிமுக்கியமான கட்டம். நண்பன் T. அன்ரன் அழுவதைப் பார்க்கும்போது மாணவ மாணவிகளும் கூட அந்த அழுகையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிப் போவார்கள். இதில் என்ன வேடிக்கையென்றால் காட்சியை மாற்றி சீன் அமைக்க இருந்த ஆள் கூட அன்ரனின் அழுகையைப் பார்ப்பதற்கு மேடையில் நின்று பார்ப்பதைவிட மேடைக்கு முன்னால் நின்று பார்த்தால் தான் நண்பனின் அபார நடிப்பின் அற்புதத்தை இரசிக்கலாம் என மேடையின் முன்னே போய் நின்று பார்த்துக் கொண்டிருக்க, தலையில் அடித்து அடித்துக் குழறின (பொன்னம்மாக்காவாக நடித்த) அன்ரனின் கொண்டை அவிழ்ந்து போக, ஒன்றும் செய்ய முடியாத நிலையில், சீன் அடிப்பவரையும் பக்கத்தே காணாத நிலையில் “ஐயோ என் கொண்டையுமல்ல அவிழ்ந்து போச்சு! எடுத்து கூந்தலை முடித்துக் கட்டவும் யாரும் இல்லை” என அழுது குறிப்பால் உணர்த்த, சீன் அடித்த ஆள் ஓடி வந்து சீன் அடித்தது இன்றும் எங்கள் மாணவ மாணவிகள் இலேசில் மறந்திருக்க மாட்டார்கள்.

அந்தளவு தான் எதில் பங்கேற்கின்றாரோ அதில் ஒன்றிப்போய் அதே பாத்திரமாகவே மாறிவிடுவார். உதைபந்தாட்டம் விளையாடும்போது இவரின் காலில் இருந்து பந்து பறிபோனால் இவரின் தகப்பனார் மைதானத்தின் வெளியே ஒரு பார்வையாளனாக நின்று கத்துவது இளவாலையில் எல்லோருக்கும் தெரிந்த செய்தி. ஹொக்கி விளையாடும் போதும் இவரின் Stickல் இருந்து பந்து பறிபோனால் Coachடம் இருந்து கிடைக்கும் அர்ச்சனை தண்டனையை விட தனது தகப்பனின் ஏச்சு அதிகம் என்பார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் கல்லூரி உதைபந்தாட்ட வாழ்க்கையில் milo வெற்றிக் கிண்ணம் Ancl, வெற்றிக் கிண்ணம், Singer வெற்றிக் கேடயத்தை கொழும்புப் பகுதியிலிருந்து வடமாகாணத்திற்கு குறிப்பாக அதுவும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு கொண்டு வருவதற்கு அன்ரன் அடித்த அபாரமான கோல்கள் யாரும் இலேசில் மறந்துவிட மாட்டார்கள். எந்தத் துறையில் பங்கு கொண்டாலும் அதில் தனது தனித்தன்மையை காட்ட அவர் தவறுவதில்லை. கவிதைகளிலும், அவரின் சிறுகதைகளிலும் கூட புதுவேகம். இவரின் சிந்தனை, கற்பனைவளம் அளவிடற்கரியது, ஒரு முடிவுக்கும் வராமல் ஓட்டம் காட்டும் சில சிறுகதைகளுக்கு நாலு அல்லது ஐந்து முடிவுகளைக் கொடுத்து இதில் எந்த முடிவு சரியெனத் தனது தாயிடம் கேட்பார். தாயின் முடிவு ஒரு வித்தியாசமான முடிவாக இருக்கும். அந்தளவுக்கு இவரின் தாயும் கலாரசனை கற்பனை வளம் மிக்கவர். இவரின் கவிதைகளில். சிறுகதைகளில் நாம் அடிக்கடி சந்திக்கும் பல போலிகள். பொய்மைகள். பம்மாத்துக்கள். இறுமாப்புக்கள் எல்லாம் வெட்டவெளியாகி நையப்புடைக்கப்பட்டிருக்கும்.

கனகச்சிதமான முடிவுகளை எந்தவிதமான ஆரவாரமுமின்றி யதார்த்தமாகச் சொல்லும் பாணி இவரின் தனித்தன்மையினைக் காட்டி நிற்கும்,

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இவரின் கவிதைகள் பல பங்கு வகித்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் "கோடுகளும் கோலங்களும்" முதலாவது கவிதைத் தொகுதி யாழ். இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவ மன்றத்தினரால் 1984-ல் வெளியிடப்பட்டு சிறந்த வரவேற்பை இலக்கிய உலகில் ஏற்படுத்திக் கொண்டது.

நண்பன் அன்ரன் செல்வக்குமாரின் பதினைந்து வருட கால எழுத்துப் பணியை வாழ்த்தும் எம் மன்றமும் நானும் இவரின் "வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கின்றாள்?" என்னும் இவரின் இரண்டாவது புதுக்கவிதைத் தொகுப்பை வெளியீட்டி வைப்பதில் அளவில்லாத மகிழ்ச்சியடைகின்றோம்.

அன்புடன்

வே.இ. தவக்குமார்

தலைவர்

இளவாலை இளங்கதிர் மன்றம்

பத்தாவத்தை

25.06.1990 இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. அவள் மனம் என்னில் இருந்தால் ........ 1
2. விழியே வருந்தாதே ........ 3
3. தொடர்கிறேன் ........ 4
4. உன் விழிகள் அறியுமா? ........ 5
5. எல்லாம் உனக்காக... ........ 7
6. காதல் உயிரெழுத்து ........ 9
7. இணைதல் ........ 10
8. இதயக் குமுறல் ........ 11
9. கேள்வி ........ 13
10. அதிர்ச்சி ........ 14
11. கணக்கு ........ 15
12. ஞாபகம் வருதே.. ........ 16
13. என் எல்லாம் நீ ........ 17
14. ஆசை... ஆசை ........ 18
15. படித்து முடியவில்லை ........ 19
16. திசையறி கருவி ........ 22
17. சத்தியம் ........ 23
18. வருடல் ........ 24
19. குறி ........ 24
20. பாடல் ........ 25
21. அக்கினிப் பூக்கள் ........ 25


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. பெப்ரவரி ........ 26
23. திருடன் ........ 26
24. காலம் ........ 27
25. தரகர் ........ 27
26. கன்னிவெடி ........ 28
27. எய்ட்ஸ் ........ 28
28. வைகறை ........ 29
29. அடுப்பு ........ 29
30. உபதேசம் ........ 30
31. அறிவொளி பரப்புவோம் ........ 31
32. கரையேறல் ........ 34
33. இளமை ஊஞ்சல் ........ 35
34. புத்துயிர்ப்பு ........ 36
35. விழிப்புணர்வு ........ 38
36. ஏமாந்த விழிகள் ........ 40
37. நத்தார் ........ 42
38. திசைமாறிய தென்றல் ........ 44
39. அறிவுமேகமே ........ 45
40. கண்ணீர் ........ 47
41. வட துருவம் தென்துருவம் ........ 50
42. கனவுகள் மெய்ப்படும் கண்ணே! ........ 51
43. அவளுக்குப் புரியுமா...? ........ 52
44. மத அழுக்கு ........ 53


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. ஈரம் இல்லையே ........................................ 54
46. மன இருட்டு ........................................ 55
47. காதல் தோல்வி ........................................ 56
48. எங்கே அவள்? ........................................ 57
49. நீ உணராத உலகம் ........................................ 58
50. இன்றைய விவசாயம் ........................................ 60
51. வயதுக்கோளாறு ........................................ 61
52. விவசாய வாழ்க்கை ........................................ 62
53. சிறை வை ........................................ 63
54. வென்றிட வேண்டும் ........................................ 64
55. காதலுடன் ........................................ 65
56. எனை ஏற்பாயோ...? ........................................ 66
57. மலரும் வண்டும் ........................................ 67
58. நட்டம் ........................................ 68
59. என்னைக் கொல்லாதே ........................................ 69
60 வானத்துப் பெண்
ஏன் கண்ணீர் வடிக்கிறாள்? ................ 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கிறாள்?

## அவள் மனம் என்னில் இருந்தால்...

அவள் விழிகள்
நீருக்குள் இருந்தால்
எப்படியிருக்கும்?
மீன் படைக்கப்பட்டதே
இந்தக் கேள்விக்காகத்தான்!

அவள் இதழ்கள்
மலருக்குள் இருந்தால்
எப்படியிருக்கும்?
தேன் படைக்கப்பட்டதே
இந்த கேள்வியால் தான்!

அவள் முகம்
விண்ணில் இருந்தால்
எப்படியிருக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவுபடைக்கப்பட்டதே
இந்தக் கேள்விக்காகத்தான்!

அவள் இடைவளைவு
மண்ணில் இருந்தால்
எப்படியிருக்கும்?
நதி படைக்கப்பட்டதே
இந்த கேள்வியால் தான்!

அவள் பெயர்
மொழியாய் இருந்தால்
எப்படியிருக்கும்?
கவிதை படைக்கப்பட்டதே
இந்தக் கேள்விக்காகத்தான்!

அவள் மனம்
என்னில் இருந்தால்
எப்படியிருக்கும்?
காதல் படைக்கப்பட்டதே
இந்த கேள்வியால்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியே வருந்தாதே

இல்லையென
சொல்லவில்லை
இதயத்தை
தொலைத்துவிட்டேன்!
இதற்காக
இப்படியா அழுவது?
கண்களே
கலங்காதீர்!
மண்ணில் கிடந்தால்
மட்கிப்போகும் இரும்பு போல...
தொலைந்த இதயம்
துருப்பிடித்துப் போகாது
அது
பாதுகாப்பாகத்தான் இருக்கும்
பாவையவள்
பாடப்புத்தகத்தில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கிறேன்

உன்
அலட்சியத்தால்
அவமானப்பட்ட
போதும்...
உன்
பார்வை அமிலத்தில்
கரைந்தபோதும்...
உன்
பேச்சுக்கணைகளால்
என் இதயம்
கிழிக்கப்பட்ட
போதும்...
உன்னையே
தொடர்கிறேன்...
தொடுவதற்காக அல்ல
உன்னிடம்
தொலைத்துவிட்ட
என்
இதயத்திற்காக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் விழிகள் அறியுமா?

உன்னிடத்தில் என்னை
தந்துவிட்டு உன்னை நான்
மறைமுகமாக ரசித்துக்
கொண்டிருக்கிறேன்...

இரவுக்காக காத்திருக்கும்
நட்சத்திரங்களைப் போல்
உன் வருகைக்காக
காத்திருக்கிறேன்.

என் இதயம்
துடிக்கும் துடிப்பை
உன் இதயம் அறியுமா...?
உன்விழிகள் அறியுமா...?

சுட்டெரிக்கும்
சூரியனுக்குக்கூட
ஓய்வும் உண்டு
இரவு வரும் பொழுது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்
உன் விழியின் தாக்கத்தால்
எரியும் என்
இதயத்திற்கு இல்லை
அணைப்பு என்பது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாம் உனக்காக...

மேகமாக நான் சுற்றி வந்தேன்
நிலவே...
உன்னை தரிசிக்கும்
ஆசையில்!

வண்டாகத்தான்
வலம் வந்தேன்மலரே...
உன்னை தொட்டிடும்
ஆசையில்!

முட்களாகத்தான் இருந்து வந்தேன்
ரோஜாவே...
உன்னை பாதுகாக்கும்
ஆசையில்!

மின்னலாகத்தான்
வாழ்ந்து வந்தேன் கண்ணே..
உன்னை கவரும்
ஆசையில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலாகத்தான் வீசிவந்தேன்
பசும்தளிரே...
உன்னை சாய்த்திடும்
ஆசையில்!

அப்போது மட்டுமல்ல - இப்போதும்
மனிதனாகத்தான் வாழ்ந்து வருகிறேன்
அன்பே...
உன்னில் என்னைக்காணும் ஆசையில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் உயிரெழுத்து

அன்பே...!
என் ஆருயிரே...
என் இன்பமே...
ஈடில்லா செல்வமே...
உன்னைப் பார்த்த நாள்முதல்
ஊமையாய் என் இதயம்
எனக்குள்
எப்போதும் ஒரு கலக்கம்
ஏன் தெரியுமா...?
உனக்கு
ஐந்து அண்ணனாம்
ஒருத்தன் கண்ணிலும் படாமல்
ஓடிவந்து உன்கை பிடிப்பேன்
நீ
ஔவைக் கிழவி ஆவதற்குள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைதல்

தூரிகையும் வண்ணமும்
இணைந்தே
ஓவியமாகிறது
சொல்லும் பொருளும்
இணைந்தே
மொழியாகிறது
சாலையும் வாகனமும்
இணைந்தே
பயணமாகிறது
கல்லும் மண்ணும்
இணைந்தே
வீடாகிறது
அன்பும் அறமும்
இணைந்த வாழ்வே
இனிமை பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக் குமுறல்

வேலை என்னும் பெயரிலே
வேலை செய்கிறோம்
சீமெந்து பக்டரியில்
எங்கள்
சோகக் கதையை
நாங்கள் சொல்லுகிறோம்
சீமேந்து பக்டரியில்
வேலை என்றால் - ஊரில்
பெருமை ஒரு கௌரவம்
என்ன கௌரவம்...?
என்ன பெருமையோ...?
நீலக்காக்கியை
ஓலையாக்கினால்
எங்கள் உள்ளக்குமுறலை
அதுவே எழுதிடும்
சப்பாத்தும் - சேட்டும் - லோங்சும்
எப்போதும் போட்டுக் கொண்டு
வேலைக்குப் போனால்
ஊரிலே பெருமைதான்
என்ன பெருமையோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன வேஷமோ...?
யார் அறிவார்...?
நாங்கள் இங்கு
Cooler இற்குள்
தூசியோடு
சீமேந்துத் தூசியாய்
உடல் கலப்படமாய்
இங்கு
கிடந்து மாளுவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி

எத்தனையோ பாதைகளை
கடந்தோம்...
ஒன்றாக கைகோர்த்து
எந்தப் பாதையை
கடந்தாய்..
என்னை
கைவிடுவதற்கு...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிர்ச்சி

உன் பார்வையின்
அர்த்தங்கள்
ஒவ்வொன்றாய்
புரிந்து கொண்டே
வந்தேன்
எல்லாம் புரிந்து
என் மனம்
சந்தோஷப்பட்ட நிலையில்
நீட்டுகிறாய்!
கையில் இருப்பது
காதல் கடிதமா..
உன்
கல்யாணப் பத்திரிகையா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கு

உழவன் கணக்கிட்ட போது
உழக்கை தான் மிஞ்சியது
நிலத்தில்...!
தாரம் கணக்கிட்ட போது
தாலி தான் மிஞ்சியது
கழுத்தில்!
பெண்கள் கணக்கிட்டபோது
கனவுதான் மிஞ்சியது
வாழ்வில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாபகம் வருதே...

என்மீது மோதினாய்
மன்னிப்பு கேட்டேன்
கண்களைச் சிமிட்டினாய்
நண்பர்களிடம்
'மோதல்' என்றேன்
அவர்கள்
காதல் என்றனர்!
என்னுள் சிறு அலை...
புத்தகத்தைப் பார்த்தேன்
வார்த்தைகள் தெரியவில்லை
நீ தெரிந்தாய்...!
ஓய்வு எடுக்கப் பூந்தோட்டம் சென்றேன்
'பூக்கள்' தெரியவில்லை
அப்போதுதான் தெரிந்தது
உன்னால் என்னுள் முளைத்தது
காதல் என்று...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் எல்லாம் நீ

என் இரவெல்லாம்
நிலவானாய்...
உனக்குள்ளே தூங்கினேன்...
என் பகலெல்லாம்
ஒளிவீசினாய்...
உன்னால் என்னைப் பார்த்தேன்..
என் கனவெல்லாம்
தேவதையானாய்...
உன்மடியில் தலைசாய்த்தேன்...
என் புத்தகமெல்லாம்
கவிதையானாய்...
உன் பெயரை எழுதி வைத்தேன்
என் தோட்டமெல்லாம்
சிவப்பு ரோஜாவானாய்...
உன் பாதையில் தூவினேன்...
என் நாட்களெல்லாம்
பண்டிகையானாய்
உன் பட்டாடையாயினேன்...
என் துடிப்பெல்லாம்
வசித்தாய் - உனக்கே
என் உயிரை அனுப்பினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை... ஆசை

பஞ்சமில்லாத தண்ணீர்
வேண்டும்...
பசியில்லாத உணவு
வேண்டும்...
கிழிசலில்லாத உடை
வேண்டும்
கள்ளமில்லாத உள்ளம்
வேண்டும்...
பிரிவில்லாத காதல்
வேண்டும்...
நேரமில்லாத காலம்
வேண்டும்...
பிரச்சனையில்லாத உலகம்
வேண்டும்...
மொத்தத்தில் இறைவா!
நான் காணும் இந்த
கனவுகள் யாவும்
பலித்திட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்து முடியவில்லை

கல்வி என்னும் ஒரு பெண்மேல்
காதல் கொண்டு அவள் பின்னே
அல்லும் பகலும் அலைகின்றேன்
ஆனால் இன்னும் முடியவில்லை

அன்னை வயிற்றில் கருவாக
அடங்கிக் கிடந்தநாள் முதலாய்
என்னைத் தொடரும் பெரும்காதல்
என் உள்ளம் தணியாப் பேரேக்கம்

அள்ளக் குறையா மண்ணின்மேல்
அப்பா கையைப் பிடித்தெழுத
பரிசுச் சொக்கிளேற்றுக்காக
பாவை அவளை முதற்பார்த்தேன்

என்னை அவளும் எதிர்நோக்க
நானும் அவளை விழிசேர்க்க
சின்னவயதில் நட்பாக
சேர்ந்தேன் அதுஒரு பழைய கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்குள்ளே அவள் வடிவம்
கருத்துக்குள்ளே அவள் வதனம்
எண்ணம் எல்லாம் அவளானால்
எவர்தான் பிரிப்பார் எம் நட்பை

காணும் நூல்கள் பலகற்றேன்
கறுப்பும் - சிவப்பும் பார்க்கவில்லை
வீணில் பொழுதைப் போக்காமல்
விழித்துப் படித்தேன் இராப் பகலெல்லாம்

அப்பா உடம்பு கெடும் என்றார்
அம்மா மூளைகெடும் என்றாள்
பொய்யோ மெய்யோநான் அறியேன்
போக்கை சிறிதும் மாற்றவில்லை.

தொட்டுத் தழுவ எழும் எண்ணம்
துறை போய்க் காணும் பேராவல்
விரிந்த விஞ்ஞானத்தின் மீது
படித்து முடிக்கும் ஓர் ஏக்கம்

படித்த நூலில் அவள் பரிசம்
விரிந்த விஞ்ஞானக் கலையில் அவளமுதம்
இரசாயன எந்திரவியல் பயிற்சிநெறிவரையும்
மெல்லிடையாள் பின்னே திரிந்திட்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அவளும் விரும்புகின்றாள்
நானும் அவளைப் பருகுகின்றேன்
இன்னும் படித்து முடியவில்லை
எப்போ முடியும்? நான் அறியேன்.

☛ *இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற கவிதைப் போட்டியில் 1982ல் முதற்பரிசு பெற்ற இக்கவிதை மீண்டும் இங்கே மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசையறி கருவி

ரீயூசன் கிளாஸ் முடிந்து
கூட்டமாகும் போகும்
பெண்கள் கூட்டமொன்றைப் பார்த்து
என் பெயரைச் சொல்லி
நண்பன் ஒருவன் ஓலமிட
அக்கூட்டத்திலிருந்து
ஒரு பெண் நாணிக்கோணி
தன்முத்துப்பற்களை
மோகனமாய்க் காட்டி
புன்முறுவல் பூக்கின்றாள்
என்பெயரைச் சொல்லி
நண்பன் ஒருவன் ஓலமிட்டால்
வீதியால் போகும் இவளுக்கு என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியம்

சாதியால் குறைந்தவனை
காதலித்த தனது மகளை நோக்கி
இனிமேல்
அவனை காதலிக்க மாட்டேன்
அவனை திரும்பிப் பார்க்கமாட்டேன்
என்று
அவளின் தந்தை
A Y ° Pm 'பைபிள்'
தொட்டு சத்தியம்
கேட்டாராம்.
அந்தோ பரிதாபம்
அவரின் அறியாமை
உள்ளே பைபிள் கூறுவதோ
எல்லோரையும் நேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடல்

சீப்பு அஃதி அவள் தலையை
உரசி வாரி விடுகின்றது - ஆனால்
என் நெஞ்சில் அஃது ஏற்படுத்திய இனிய வருடலை
யாரும் அறிந்திருக்க நியாயமில்லையே!

## குறி

குறி அது சரிதான்...
ஆனால்; அந்த மரத்து
மாங்காய்தான் விழுந்து
ஆற்றோடு போய் விட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்

நன்றாகப்பட்டு அனுபவித்த
எனது உள்ளத்தின் ஈரப்புள்ளிகள்
காய்ந்த எனது இதயத்தின்
கல்லறை வரிகள்!

## அக்கினிப் பூக்கள்

ஓ... பூக்கள்
ஒருமுறை தான் மலர்கின்றதாம் - இந்த
தீக்குச்சிகளின் விதியை
யார் நினைத்துப் பார்க்கின்றார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெப்ரவரி

வருடத்தாய் பெற்றெடுத்த
பன்னிரண்டு குழந்தைகளில்
ஒரு குறைமாதமான
பிரசவக்குழந்தை!

## திருடன்

நாய் குரைத்ததும்
அப்பா விழித்துக் கொண்டார்
கிணற்றடி வேலிக்கப்பால்
என் இதயத்தை திருடியவன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம்

பறந்து கொண்டே
புணருகின்றன இந்த
வண்ணாத்திப் பூச்சிகள்
காலம் பொன்னானதாம்!

## தரகர்

கலியாணத்தரகர்
அவர் வீட்டிலோ
இதயத்தில் ஏக்கங்களுடன்
வயதான கன்னிப் பெண்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிவெடி

ஓ... என் இனியவளே!
உன்னை
முதன்முதலாகப் பார்த்தவுடன்
என் இதயம்
சுக்கு நூறாக
சிதறிவிட்டதே!
ஓ... இதுதான்
கன்னிவெடியா...?

## எயிட்ஸ்

தேன் எடுக்க
காட்டுக்குச்
சென்றேன்
கொட்டிவிட்டது
வண்டு
ஒன்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகறை

பூமிக்கு வியர்க்கிறது
சூரியனே
கதவுகளைத் திற.

## அடுப்பு

வயிற்றில் நெருப்பைக்
கட்டிக் கொண்டு
வாழ்கிறது
அடுப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபதேசம்

புகைபிடித்தலால்
ஏற்படுகின்ற
தீமையினைப் பற்றி
இரவு பகலாக
ஆராய்ச்சிக்கட்டுரை
எழுதிமுடித்த
பிரபல எழுத்தாளனின்
மேசையைச் சுற்றிலும்
எண்ணற்ற
'சிகரெற் பில்டர்கள்'
பரவலாக
சிதறிக்கிடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவொளி பரப்புவோம்

நீருடன் காற்றும் சேர
நிலத்தினில் விழுந்த வித்து
வேருடன் தழைத்து வாழ
வெய்யவன் கதிரும் வேண்டும்
சீருடன் பிறந்த மக்கள்
சிறப்புறு நலன்கள் எய்திப்
பேருடன் புகழும் சேர்க்கப்
பெருமைசேர் கல்வி வேண்டும்.

பாய்ந்திடும் நதியால் அன்றோ
பயிர்வளம் பெருகி ஓங்கும்
ஆய்ந்திடும் திறனை நல்கி
அறிவொளி ஊட்டும் கல்வி
சாய்ந்திடும் மடமை நீக்கிச்
சால்புடன் வாழச் செய்யும்
வாய்த்திடும் வசதிற்கேற்ப
கல்வியை வளர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுடன் வாழ்வோர் நெஞ்சில்
அமைந்திடும் கல்வி தன்னால்
மருளுடன் இருப்போர் தங்கள்
மடமைகள் தீரும் என்போம்
பொருளுடன் வாழ்ந்த போதும்
பீடுறக் கல்வி வேண்டும்
இருளுடன் இருந்த வீட்டில்
ஏற்றிய விளக்கே கல்வி.

கற்களே சிலை என்றானால்
காலத்தால் நிலைத்து நிற்கும்;
சொற்களே கவிதை ஆனால்,
சுவையுடன் நீண்டு வாழும்;
வற்கட மடமை நீக்கி
வாழ்விக்கும் கல்வி ஒன்றே
பொற்குடம் மிளிர்தல் போல்
புகழுடன் விளங்கச் செய்யும்.

எங்கெங்கே இருள் என்றாலும்
இளங்கதிர் விரட்டல் போல
அங்கங்கே கல்வி ஊட்டி
அறிவொளி பரப்ப வேண்டும்
மங்கிடும் மடமை மாய்ப்போம்
மக்கள் எல்லோரும் கற்போம்
பொங்கிடும் அறிவால் ஓங்கப்
பொறுப்புடன் கல்வி கற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவில்லா மாந்தர் வாழ்வில்
அல்லலே நிறைந்து நிற்கும்
செறிவிலா மரத்தின் கீழே
சிறப்பான நிழல் உண்டாமோ?
அறிவொளி பரப்பும் நோக்கை
அனைவரும் உணர்தல் வேண்டும்
அறிவினால் ஆகும் என்போம்
அறிவொளி பரப்பி நிற்போம்.

*வற்கடம் - வறுமை*

*1983ம் ஆண்டு இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கிடையே நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதல் பரிசு 1000/- பெற்ற கவிதை மீண்டும் இங்கே மறுபிரசுரம் செய்யப்படுகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரையேறல்

நீ
எனக்கு எழுதிய
காதல் கடிதங்களை எல்லாம்
நான்
கப்பலாகச் செய்து
தண்ணீரில் விட்டு விட்டேன்
ஏனென்றால்;
எங்கள் காதல்தான்
கரைசேரவில்லையே!
அந்தக் கப்பலாவது
கரையேறட்டும் என்றுதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமை ஊஞ்சல்

அந்த வட்டமுகம்
அந்த இரட்டைப் பின்னல்
அந்த வெள்ளைச் சீருடை
அந்த "நீலம் + வெள்ளை டை"
அந்த வெள்ளை சப்பாத்து
அந்த வெள்ளை சொக்ஸ்
அந்த அளவான உயரம்
இவையெல்லாம் இப்போதும்
என் நெஞ்சுக்குள்ளே
ஓடிப்பிடித்து
விளையாடிக் கொண்டே தான்
இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்துயிர்ப்பு

"பெண்ணே"
நீ
உன் காதலனை
உன்னை
மலருடன், வானுடன்
நதியுடன், கடலுடன்
உருவகித்த உந்தன்
தலைவனைத் தேடுகின்றாய்!
தாயே! நீயோ...

உந்தன்
தலைமகனுக்காக கண்ணீர் வடிக்கின்றாய்!
ஆயின்
இவர்களோ, இம்மக்களோ
தங்கள் தலைவனைத் தேடுகின்றார்கள்!
பாலையெனக் கிடந்த வாழ்வில்
சோலையினைக் காட்டிய
அந்த மாமனிதனை
மலைகுலையினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சின் நிலை குலையாத
பேராசானைத் தேடுகின்றார்கள்
"அவன் எங்கே...?
அவன் எங்கே...?"
அவனை அவர்கள் என்ன செய்தார்கள்?
ஒரு அதிசயம் போல்
ஒரு அற்புதம் போல்
ஒருநாள் மின்னலென
அவன் தோன்றுவான்,
இருளினுள் ஒளி பாய்ச்சுவானென்று
இன்னமும் இவர்கள் நம்புகின்றார்கள்
தங்கள் தலைவிதியையே
உன்கைகளில் தந்துவிட்டு
இவர்கள் காத்து நிற்கிறார்கள்
தலைவா!
என்று நீ உன் கல்லறையிலிருந்து
மீண்டும் உயிர்க்கப் போகின்றாய்?
புல்மேடுகளுக்குள் இருந்து
உந்தன்
பயணத்தைத் தொடங்கப் போகின்றாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்புணர்வு

அடியே!
என் பிரிய சுகியே
இந்த வேதனை
இந்த சோதனை
உனக்குத் தெரிகின்றதா?
அன்றி புரிகின்றதா?
அழுவதற்குக் கூட
இவர்கள் அஞ்சுகின்றார்கள்
பின்
எழுவதென்றால்... எப்படி?
அடியே இந்த சோகம்
நெஞ்சின் இந்த ஓலம்
உனக்குத் தெரிகின்றதா?
அன்றி புரிகின்றதா?
குட்டக் குட்ட குனிந்து
கூன் விழுந்த முதுகினிலே
திட்டுத்திட்டாய்
இரத்தக்கறைகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியே
இந்த துயரம், கலக்கம்
உனக்குத் தெரிகின்றதா?
அன்றி புரிகின்றதா...?
"துயரமே வாழ்வாகக் கொண்ட
தமிழ்பேசும் மக்கள் இவர்கள்
என்று விழித்தெழுவார்கள்?"
என்று நீ கேட்கிறாய்
நானும் அதனைத்தான்
கேட்கின்றேன் -
"என்று இவர்கள்
விழித்தெழுவார்கள்?!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமாந்த விழிகள்

நிஜத்திலே
உன்னைத் தேடி
சளைத்து விட்ட
எனது மனம்
கற்பனையில்
நடந்து சென்று
உன்னை காண
முயலுதடி...
கதிரையிலே
இருந்தபடி
உன்னைத் தேடும்
ஊனமகன்
தேடித்தேடி
அலைகின்றான்
உன்முகத்தை
காண்பதற்கு...
கற்பனையில்
தேடியும் நான்
அவள் முகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை
என்றுசொல்லும்
எனது மனம்
கற்பனையை
வெறுக்குதடி...
வெறுத்துவிட்ட
கற்பனையை
பிரிந்து மனம்
வருகையிலே
ஏமாந்த
எனது கண்ணில்
எத்தனையோ
நீர்த்துளிகள்...

கற்பனையின்
கண்கள் இன்று
கண்டு மூடிவிடும்
அவளை என்று
காத்திருந்த
என் விழிகள்
ஏமாந்த
விழிகள்தானே...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார்

மார்கழி குளிரினிலே - கன்னி
மரியாளின் மடிதனிலே
மானிடனின் பாவம் போக்க
மனுவானீரோ மண்ணில் நீரே

அமைதியின் தேவனும் - நீர்
அன்பின் அரசனும் நீர்
நீதியின் ராஜனும் நீர்
நின் நித்திலத்தின் வேந்தனும் நீர்

வானோர்கள் ஸ்துதிகள் மீட்ட
வான் வெள்ளிபாதை காட்ட
மானிடத்தை மீட்கவென்று நீர்
மானிடனாய் மனுவானீர்

மாட்டுக் குடிலினிலே நீர்
மனித அவதாரம் எடுத்தீர்
ஏழ்மையிலும் ஏழ்மையாகி
எம்பாவம் போக்க அவதரித்தீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவீதின் குலக்கொழுந்தே
தரணிக்கும் விடிவு நீரே
தாழ்ந்து நிதம் பணிகின்றோம் - எம்
தேவைகளைத் தீர்த்திடுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசைமாறிய தென்றல்

வஞ்சியிவளின்
நெஞ்சக் காதலனின்
கொஞ்சு மடலைச்
சுமந்துவரும்
மேக தூதர்களெல்லாம்
அரைவழியில்
அழிந்து போகிறார்களாம்
நெடுநாளாய்
அணுகுண்டின்
ஆட்சி...
அண்டை வெளியில்
நடப்பதனால்
தெவிட்டாத காதலுக்கு
தென்றலைத் தூதுவிட
தேன்மொழியாள்
அழைத்த போது...
அவையும்
திசைமாறிப் போகின்றனவாம்
ஆயுதங்களின்
ஓயாத உரசல்கேட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுமேகமே

கானகத்தில் விலங்குகளுண்டு
ஆனால்
சாதி சமயம் என்கின்ற
விலங்குகள் இல்லை
வானகத்தில் பட்சிகளுண்டு
ஆனால்
ஏழை பணக்காரன் என்ற
கட்சிகள் இல்லை
சண்டை சச்சரவு என்ற
அச்சங்கள் இல்லை
பூதலத்தில் நாகரீகமுண்டு
அதை அறிந்த மனிதருமுண்டு
அவருக்கு ஆறாவது அறிவுமுண்டு
ஆனாலும் அங்கேதான்
அடிதடிகள் அதிகமுண்டு
அணுவைப் பிளந்துவிட்டார்கள்
ஆனால் அவர்கள் மனங்களை
கோட்டைவிட்டார்கள்
அறிவு மேகமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உறவு மழையைப் பொழி
இங்கே இதயப் பூஞ்செடிகளில்
புரிந்துணர்வுப் பூக்கள் மலரட்டும்
எங்கும் ஒற்றுமை மணத்தை
எங்கும் பரப்பட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்

காரிருள் கிழித்தே மின்னல்
கிழக்கினில் கூறுகள் போட்டுச் செல்ல
கூடவே இடியும் இடித்து
வடக்கு - கிழக்கே ஓடும்
கனரக வாகனங்களின்
கட... கட.. என்ற பேரொலியோடு
போட்டி போட்டுக் கொண்டு
உருண்டோடிட
கூ...கூ... என்ற
பேய்க்காற்றும்
நெஞ்சம் குமுறியே
விரைந்து போக
இரவு பகலாக - இந்த
வானத்துப் பெண் ஏன்
கண்ணீர் வடிக்கிறாள்...?
இளமை உணர்வுகள்
இதயத்தில் பாறையாகி இறுகிவிட
சீரழிந்து போனதுவோ
இத்தையரின் வாழ்வும்...?
பருவப்பசிக்குப் பாதைகாட்டியவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைப் பாதையில்
நடத்தற்கியலாத கோழையாகி
உணர்வுகளின் சங்கமத்தில்
உறவுகளைப் பலியிட்டு
ஓடினானோ இவள் காதலனும்...?
பலாலி இராணுவமுகாமிலிருந்தும்
மண்டதீவு இராணுவ முகாமிலிருந்தும்
கோட்டை மதிற்சுவருக்குள்ளும் இருந்து
தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக
'அவங்கள்' ஏவிவிடும்
'ஷெல்' அடிபட்டு
இவளின் குடும்பத்தலைவன்
மாண்டதனால் - குமுறி
அழுகின்றாளோ - இப்பெண் அவளும்...
வயதில் இளையவனைத் - தன்
இதயத்திலேற்றி
நிலைகுலைந்ததனால்
கண்ணீர்விட்டழுகின்றாளோ...
இக்கன்னிப் பெண் அவளும்...?

ஆசியாவிலேயே
பெரிய நூலகமான
யாழ்நூலகம்
குண்டர்களால் எரியூட்டப்பட்டு
அதில் இருந்த அத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையான புத்தகங்களும்
எரியுண்ட செய்திகேட்டு
கண்ணீர்விட்டழுகின்றாளோ
இக்கன்னிப் பெண் அவளும்
இரவு பகலாக இந்த
வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கின்றாள்?
சொன்னால் தானே தெரியும்
சொல்லுவாளா எந்தனுக்கு...???

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட துருவம் தென்துருவம்

பௌர்ணமி நிலவு...
நீ என்றேன்
அமாவாசை நான்
என்றாய்!
புலரும் பனி...
நீ என்றேன்
உருகும் நீர் நான்
என்றாய்!
தென்றல் காற்று...
நீ என்றேன்
வீசும் புயல் நான்
என்றாய்!
சூடும் பூமாலை...
நீ என்றேன்
சிறு பூநாகம் நான்
என்றாய்
ஓ... அதனால் தான்
ஈர்க்கின்றதோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகள் மெய்ப்படும் கண்ணே!

உன்னை நீ ரசித்துக் கொள்ளவும்
நேரமின்றி - நீ பிஸி
ஆகவேண்டும் உன் கல்வியில்
கடந்த காலங்கள்
உன்னை நசித்திருக்கும்...
நெஞ்சம் விசித்திருக்கும்...
இமைகள் வியர்த்திருக்கும்...
சுமைகள்
பெயர்த்திருக்கும்...
இதோ...
இப்போ நடப்பவை
இனிய காலங்கள்...
இப்பொழுது நீ
ஒளி சிந்தும் பவுணர்மி..
மிரளவைக்கும் முழுநிலா...
உன்னை நீ ரசித்துக் கொள்ளவும்
நேரமின்றி நீ பிஸி
ஆக வேண்டும்
உன் கல்வியில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவளுக்குப் புரியுமா...?

கவிதை என்றால்
அவளுக்குப்
பிடிக்காதாம்!
அவளே ஒரு
அழகுக் கவிதை
என்பதை
அவளுக்கு - நான்
எப்படி புரிய
வைப்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத அழுக்கு

பூமிகூட
மேகத்திடம்
நீர் கேட்டு
தன்னைச்
சுத்தமாக்கிக் கொள்கிறது
மனிதா...
நீ மட்டும்
ஏன்
மத அழுக்குடன்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரம் இல்லையே

என்னை
வஞ்சித்து விட்டுப் போன
என் பிரியமான
காதலியே!
நிலவையும்
இனிமேல்
உன்னுடன்
ஒப்பிட முடியாது!
ஏனெனில்,
நிலவில்தான்
தண்ணீர்
இருக்கிறதாம்!
ஆனால்
உன் இதயத்தில்
ஈரம் இல்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன இருட்டு

பார்க்காதே
என்றாய்...
பகலெல்லாம்
இரவானது!
நினைக்காதே
என்றாய்...
நிலவுகூட
வெப்பமானது!
நேசிக்காதே
என்றாய்...
தென்றல் கூட
புயலானது!
மறந்துவிடு
என்றாய்...
என் மனசே
இருட்டானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் தோல்வி

விடியற்காலையிலும்
என்
விழிகள்
மூடவில்லை...
என்
தலையணைதான்
தெப்பமாய்
நனைந்திருந்தது...
என்
கண்கள் பெய்த
மழையினால்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே அவள்?

எங்கெல்லாம் தேடுவது
என்னவளை? கொடி கொடியாய்
தேடினேன்...
அவள் பூவல்லவா? அதனால்!
கோவில் கோவிலாய்
தேடினேன்
அவள் சிலையல்லவா? அதனால்!
வானத்திலும் தேடினேன்...
அவள் நிலவல்லவா? அதனால்!
புத்தகங்களிலும் தேடினேன்
அவள் கவிதையல்லவா? அதனால்!
'ஒவ்வொன்றிலும்
தேடும் நீ உன்னிடம் தேட
ஏன் மறந்துவிட்டாய்...?'
என்று எவரோ சொன்னதும்
எனக்குள் நான் எட்டிப் பார்க்க...
உள்ளே ஒளித்திருந்த
கள்ளி அவள்
உடனே சிரித்துவிட்டாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ உணராத உலகம்

உன் வீட்டு வாசலில்
மரங்கள் உதிர்த்த பூக்களை
துடைத்தெறிந்து - நீ
நீர் தெளித்து கோலமிடுவதும்...
உன் வீட்டு
மாமரத்துக் குயில்களை
உன் வானொலியோசை
துரத்திவிடுவதும்...
அதிகாலை பட்டாம் பூச்சியின்
மௌன சிறகடிப்பு
தொலைக்காட்சிக்குள்
தொலைந்து போவதும்...
தேடிவரும் தென்றலுக்கும்
கதவடைத்து
மின்விசிறிக்குகீழே
கூந்தல் காய்வதும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
காதல் சொல்ல வந்தபோதெல்லாம்
நான் மவுனமாய் மவுனமாய்...
மன்னித்து விடுதோழி
உன்
செயற்கை சுவாசத்தால்
என்
நுரையீரலில் ரத்தம் ரத்தம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய விவசாயம்!

மூன்று மூட்டை
தானியத்தை
நிலத்தில்
விதையாய்க்
கொட்ட,
கதிரவன்
காய்ந்து கெடுத்தது....!
மீதியை
பேய்மழை
பெய்துகெடுத்தது...!
விளைந்ததை
எலிதின்று கெடுத்தது...
கடைசியில்
மிஞ்சியது என்னவோ
இரண்டு மூட்டை
தானியம் தான்
அதிலும் பாதி பதர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதுக்கோளாறு!

ஐந்து வயதில் தொலைத்த
கணித வாய்ப்பாடு
பத்து வயதில் தொலைத்த
பாடப் புத்தகம்
பதினைந்து வயதில் தொலைத்த
துவிச் சக்கரவண்டி
இருபது வயதில் தொலைத்த
ஹொண்டா மோட்டார் பைக்
இவையெல்லாம் - பின்னர்
திரும்பக் கிடைத்தன
இருபத்தைந்து வயதில்
அவளிடம் தெரிந்தே தொலைத்த
இதயத்தைத் தவிர...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாய வாழ்க்கை!

விதைக்கப்பட்டது
விதை மட்டுமல்ல
நம்பிக்கையும்...
செழித்து வளர்ந்தது
பயிர் மட்டுமல்ல
வறுமையும்...
கடைசியில்
கருகிக் காய்ந்தது
கதிர் மட்டுமல்ல...
வாழ்க்கையும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறை வை

காதலியே...
மீன்களை
கண்ணாடித் தொட்டியில்
சிறை வைக்கிறாய்!
காதல் பறவைகளை
கம்பிக் கூண்டில்
சிறை வைக்கிறாய்!
ரோசாச் செடிகளை
மண் தொட்டியில்
சிறை வைக்கிறாய்!
ஆனால்;
என்னை மட்டும்
ஏன்
உன் இதயத்தில்
சிறை வைக்க மறுக்கிறாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்றிட வேண்டும்

வென்றிட வேண்டும்
வென்றிட வேண்டும்
தமிழ்
வென்றிட வேண்டும்
பறந்திட வேண்டும்
பறந்திட வேண்டும்
புலிக்கொடி
தமிழீழத்தில்
பறந்திட வேண்டும்
வாழ்ந்திட வேண்டும்
வாழ்ந்திட வேண்டும்
தமிழன்
உரிமையுடன்
வாழ்ந்திட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலுடன்

மழைக்காக
நீ பிடிக்கும் சிறுகுடைக்குள்
எனக்கும் கொஞ்சம்
இடம் தருவாயா...?
வெய்யிலுக்காக
நீ ஒதுங்கும் மரத்தடியில்
என்மடிமீது
சில நிமிடம்
தலை சாய்ப்பாயா...?
வியர்வைகள்
நீ துடைக்கும் கைக்குட்டையில்
என் பெயரின்
முதலெழுத்து A
பின்னிவைப்பாயா...?
கனவுகள்
நீ காணும் அதிகாலை நித்திரையை
எனக்கே எனக்கென்று
உயில் எழுதுவாயா...?
இரகசியப் பேழையாய்
நீ பூட்டிவைத்த
உன்மனதில்
என் நினைவுகளை
மொத்தமாய்
பதுக்கிக் கொள்வாயா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனை ஏற்பாயோ...?

நீரின்றி அமைந்தாலும்
அமையும்
இவ்வுலகம்
நீயின்றி அமையுமோ...?
நிலமின்றி வாழ்ந்தாலும் வாழும்
இவ்வுலகம்
உன் நினைவின்றி வாழுமோ
சுவாசமில்லா வாழ்வுகூட
சில நிமிடம்
உன் வாசமில்லா வாழ்க்கைக்கு
அதுவும் இல்லையோ?
உனக்காக எனப்பகைத்த
இந்த இயற்கை எனை
அழைக்கும் முன்பாவது
எனை
ஏற்பாயோ...
என்
அன்புக்காதலியே...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் வண்டும்

நீ
பிறந்து வளர்ந்த
பருவங்களில்
நானும்
உருவெடுத்தேன்
இளைஞனாக!

நீ
பட்டாம்பூச்சியாய்
சுடிதார்
பஞ்சாபி
தாவணி
வண்ணத்தில்
அலைந்து திரிந்தபோது
நானும்
கவரப்பட்டேன்
பக்கத்து வீட்டுக்
கவிஞனாக...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்டம்

பாபர் மசூதி
இடிக்கப்பட்டதால்
நட்டம்
நபிகள் நாயகத்து அல்ல
மாபெரும்
இந்தியாவின்
ஜனநாயகத்துக்குத்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைக்கொல்லாதே

புத்தம் புது ரோசாவாய் - நிதம்
புன்னகைக்கும் உன் முகத்தின்
கத்தி போன்ற கூர்விழிகள் அதன்
கடைப்பார்வை கொல்லுதடி!

நித்தம் உன் தரிசனத்தால் - வானத்து
நிலாகூட வாடுதடி
பித்தனாக்கி வைத்தென்னை - நீ
பேசாது செல்வதென்ன? உனை

நாடித் தவம் புரியும்
காதலனாம் எந்தனது
நாடித் துடிப்பதனை - சற்று
நாடிபிடித்துப்பார்!

தேனாய் இனிக்கின்ற - இனிய
தென்றல்போல் வந்தெந்தன்
மேனி தழுவுவதாய் - தினம்
மெய்மறந்து நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கின்றாள்...?

கற்றோர் கலைப்பீடம் கண்மணியாப் பேணிவந்த
பொற்றாமரை விளக்குப் போலிருந்த நூல்நிலையம்
அறிவுக் களஞ்சியத்தை ஆண்டாண்டாய்க் கிளைவிட்டுப்
பரந்திருந்த ஆலமரம் பார்க்கப் பசிதீரும்

நாலுதிசை வண்டுகளும் நறுமலரைத் தேடி வந்து
காலமெல்லாம் தேன் எடுத்த கற்பகத்தின் பூஞ்சோலை
செந்தமிழர் கல்விக்குக் கோடரி வைக்கவெனச்
சிந்தையிலே எண்ணிவிட்ட தேசத் துரோகிகளால்

எரியூட்டப்பட்டதம்மா! ஈழமகள் காவியத்தை
அரிந்து உயிரெடுத்தார் அரைக்கும் மஞ்சள் துண்டுக்கு
தாயைக் கொலை செய்த சந்ததியார் சிங்களவர்
நாயாய்ப் பிறந்து வந்தார் நமது சொத்தை நீறாக்க

தேசப்பிதாக்கள் சிந்தனையின் கோபுரத்தை
பாச இமயமலை பல்கலையில் உற்பத்தி
படுசாம்பல் ஆக்கிவிட்டார் கொடும்பாவியாகிடுவார்
சுடுசாம்பல் துகளினிலே தோன்றும் ஒரு மாளிகையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்திசையும் போற்றும் இயல்புடைய வித்தகனார் - சம்
பத்திரிசியார் கல்லூரி பறக்கச் சிறகு தந்த
உத்தமராம் லோங்அடிகள் ஊரூராய்ச் சேர்த்து வந்து
தேசப்பிதாக்களோடு சேர்த்தமைத்த சித்திரத்தை

நீசப்பிறவிகளோ நீறாக்கிவிட்டார்கள்
கண்டதுமே கைவணங்கும் கல்வி இசைபெருகும்
மண்டபத்தை நெருப்பால் மயானமாய் ஆக்கிவிட்டார்
மகாபாவத்தை தம் வம்சம் முழுவதற்கும் செய்துவிட்டார்

எண்டிசையும் காணா இனப்பழியைச் செய்துவிட்டார்
செய்தியைக் கேட்டார் திடுக்கிட்டார் தாவீது
ஐயோ கலாநிதியோ அக்கணமே உயிர்விட்டார்
வெடிபட்ட மானாய் வீழ்ந்தாள் தமிழரசி

கல்விநதி பாய் நிலத்தை - பெரும்
அக்கினி யால் அழித்தெறிந்த காவலர்கள்
செயல்பொறுக்க மாட்டாமல் வானத்துப்பெண் இவளும்
தாரைதாரையாய் கண்ணீர் வடிக்கின்றாள்.

சீரழிந்து நாட்டின் சிறப்பழிந்து சிங்களவர்
பேரழிந்து அவர் சொத்து சுகமிழந்து
நாதியற்று நலிவடைந்து ஊனமுற்று போகையிலே
நம்மீழம் பிறந்துவர நாம் இனிதாய்க் காண்போமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாகும் இதர நூல்கள்!

## ஈழத்துக் கவிதைகள்

| | |
|---|---|
| நள்ளிரவுச் சூரியன் (பன்னாட்டுக் கவிதைகள்) நோர்வே நக்கீரனார் | 23.00 |
| தாயகச் சமாதானம் - ஜெயா நடேசன் | 20.00 |
| யுத்தகாண்டம் - முல்லை அமுதன் | 20.00 |
| ஆகாய கங்கை - விக்கி நவரட்ணம் | 60.00 |
| துப்பாக்கியில் துளிர்விடும் தேசம் | 20.00 |
| என் வசந்தம் வராமலே போய்விட்டது-அஸ்வகோஸ் | 20.00 |
| புலராத பொழுதுகள் - திடலூர் ஞானி | 17.00 |

## தேசநலக் கவிதைகள்

| | |
|---|---|
| உண்மை உழைப்பாளர் - எஸ்.மணிவாசகம் | 21.00 |
| மலேசிய மண்ணின் வரலாறு | 30.00 |
| மலேஷியாவில் தமிழாசிரியர் | 24.00 |
| வீர வணக்கம் | 35.00 |
| சும்மாவா கிடைத்தது சுதந்திரம் | 35.00 |
| அமைதிக்காக போர் | 28.00 |
| இன்னொரு போர்வாள் | 35.00 |
| ஒரு தியாகியின் கனவு | 28.00 |
| உணர்வுக்களம் | 65.00 |

## சமூக – வாழ்வியல் – தத்துவக் கவிதைகள்


| | |
|---|---|
| அந்தமான் கவிதைகள் - அருன் | 28.00 |
| இருள் விடிவதற்கே | 24.00 |
| நினைவுகளின் அடைமழை | 16.00 |
| ஆத்ம அலைகள் | 20.00 |
| உணர்வுகள் | 30.00 |
| சிந்திப்பாய் என் தோழா | 25.00 |
| பெண்ணினமே வீறுகொண்டு எழு | 23.00 |
| மலரட்டும் மனித நேயம் | 35.00 |
| ஞானக் கிறுக்கல்கள் | 15.00 |
| ஆசிரியரை வணங்கு | 32.00 |
| ஒளியைத் தேடும் இரவு | 30.00 |
| மனசாட்சி | 27.00 |
| மாண்டுபோன மனித நேயம் | 20.00 |
| சமுதாயத் தேடல்கள் | 24.00 |
| நாளைய தலைமுறையினருக்கு ஓர் அறைகூவல் | 30.00 |
| வாழ்க்கை ஒரு வானவில் | 25.00 |
| வறுமை ஒரு தடையல்ல | 22.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org